உ



# சிவஸ்ரீ. ஏ. வை.

# விஸ்வலிங்கக் குருக்கள்

அவர்களின்

★

# நினைவு மலர்.

★ ★ ★

ஸ்ரீ கணேச அச்சகம், திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நேரிசை வெண்பா

ஆண்டது அக்ஷயமாம் பேர்மாசி பூர்வமதாம்
பூண்ட சதுர்த்திபுகழ் அஸ்வினியே - பார்புகழும்
வேதமுணர் விஸ்வலிங்கக் குரு பரமபதம்
போதமுறக் கண்டார் உவந்து.



## சிவ. ஸ்ரீ. ஏ. வை. விஸ்வலிங்கக் குருக்கள்

தோற்றம்:
27-8-1895

மறைவு:
4-3-1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# உங்கள் விருப்பம் நிறைவேறும்

திருநகராம் திருக்கோண மாமலையின்
திருவாய் அமர்ந்த உப்புவழிப்
பெரிய தொடுவாய்ப் பதிஉயரும்
புகழார் சித்தி விநாயகரும்
அருளார் காளி ஆலயமும்
அர்ச்சித் திருந்தீர் விஸ்வலிங்கக்
குரு மா மணிநீர் உவந்திட - நாம்
கோவில் மீண்டும் அமைத்திடுவோம்.

திருக்கோணமலை வாழ்
சைவப் பெருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
    தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலார்
    மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
    நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
    கோண மாமலை யமர்ந்தாரே.

வான் முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ. ஸ்ரீ. ஏ. வை. விஸ்வலிங்கக் குருக்கள் அவர்களின்

மனைவி: சரஸ்வதி அம்மா

சகோதரங்கள்: சிவ. ஸ்ரீ. பஞ்சாட்சர ஐயர், நாகம்மா, ராசம்மா, செல்லம்மா

மைத்துனர்: சிவ. ஸ்ரீ. க கு: வைத்தீஸ்வரக் குருக்கள்

மைத்துனிமார்: இரெத்தினம், மனோன்மணி

சகலன்: சிவ.ஸ்ரீ. மு. சபாபதி ஐயர்

பெருமக்கள்: சிவ.ஸ்ரீ. இ. கந்தசாமிக் குருக்கள்
விமலாதேவி, விஜயநாதன்

மருமகள்: வை. தங்கநாச்கியார்

மருமகன்: சிவ. ஸ்ரீ செ. தியாகராசாக் குருக்கள்

பேரப் பிள்ளைகள்: கந்தசாமி, பத்மாவதி
சிவ.ஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக் குருக்கள்
சோ. தியாகேஸ்வரி

பூட்டப் பிள்ளைகள்: இராசநாதன், சரோஜாதேவி,
லலிதாதேவி, வசந்தாதேவி, உமாதேவி.
சிவரஞ்சனி, சத்தியநாதன், சிவகுமாரன்

கொப்பாட்டப் பிள்ளைகள்: சிவப்பிரியா, சஞ்சீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ. ஏ. வை. விஸ்வலிங்கக் குருக்களின் வாழ்வும் பணியும்

## புலவர். சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக் குருக்கள்

சிவபூமி என்று திருமந்திரமும், தென் கைலாயம் என்று புராணங்களும் புகழும் திருக்கோணமாமலையின் வீரசைவப் பரம்பரையில் தோன்றிய சிவஸ்ரீ. ஏ. வை. விஸ்வலிங்கக் குருக்கள் ஆயிரம் பிறை கண்ட அமரராக வாழ்ந்து தொண்ணூற்றிரண்டாவது வயதில் அக்ஷய வருடம் மாசி மாதம் 19ம் திகதி (4-3-1987) பின்னிரவு சிவ சமாதியடைந்தார்.

இவர் புகழ்பெற்ற சிவபூஜாதுரந்தர், சித்த வைத்திய நிபுணர் சிவஸ்ரீ. ஏரம்புஐயர் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் நான்காவது அருந்தவப் புதல்வராக 1895ம் ஆண்டு ஆவணி மாதம் இருபத்தேழாம் திகதி பிறந்தார். வேத ஆகமம் கற்றுணர்ந்த சிவஸ்ரீ. சரவணமுத்துக்குருக்கள் சிவ. ஸ்ரீ. இராமலிங்கக் குருக்கள் முதலானோரிடம் வேதம், ஆகமம், புராணம் முதலாய துறைகளில் கற்றுயர்ந்தார்.

வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவராகிய குருக்கள் அவர்கள் பேரனார் சிவஸ்ரீ அருணகிரிக் குருக்கள், தந்தையார் சிவஸ்ரீ. ஏரம்பு ஐயர், தமயனார் சிவஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் அவர்களிடமும் முறையாக சித்த ஆயுர்வேத வைத்தியம் பயின்று மக்களின் நோய் தீர்க்கும் மருத்துவராகவும் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றினார். பஸ்பம், செந்தூரம், மாத்திரை, எண்ணெவகை, இலேகியங்கள், இரசாயனங்கள் முதலாய மருந்து வகைகள் செய்வதில் கைதேர்ந்தவர் என்பதை அவரிடம் சித்த ஆயுர்வேத வைத்தியம் பயின்ற காலத்தில் நான் அவதானித்தேன். துன்பமுற்றோரின் பிணி நாடி வைத்தியம் செய்வதில் கைதேர்ந்த நிபுணராக விளங்கினார்.

உப்புவழி பெரிய தொடுவாய் விநாயகர் ஆலயமும் காளிகோவிலும். அவரின் உயிர்மூச்சாக விளங்கியது. 1985ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தால் இரண்டு கோவில்களும் பாதிப்புற்றன. திருக்கோணமலைவாழ் சைவப் பெருமக்களின் அளப்பரிய உதவியோடு அன்னார் உருவாக்கிய கோவிலும், கோவில் சொத்துகளும் அழிவுற்றன இத்துயரச் செய்தி அவருக்கு பேரதிர்ச்சியையும், பெருங்கவலையையும் கொடுத்தது. இறுதி மூச்சுவரையில் விநாயகப் பெருமானின் நினைவு காளியம்மாளின் நினைவு, அவரின் உயிரில் கலந்த நினைவாயிருந்தது.

மீண்டும் கோவிலமைப்போம் கும்பாபிஷேகம் செய்வோம். கடந்த காலத்திலும் வருங்காலம் பொற்காலமாக அமைய வேண்டும். அன்னார் அமைத்த திருக்கோயில்கள் வருங்காலத்தில் இன்னும் பொலிவுற்று விளங்க வேண்டும் இதுவே அவருக்கு நாமனைவரும் அவரின் ஆத்மசாந்திக்கு செய்யும் நல்ல தவப்பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவில்

சைவ சிந்தாந்த சிகாமணி சைவப் புலவர் - பண்டிதர்
**இ. வடிவேல்**

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து நாலரைக் கில்லோ மீற்றர் தூரத்திலும், புகையிரத நிலையத்திலிருந்து மூன்று கில்லோ மீற்றர் தூரத்திலும், உப்புவெளிக் கிராமத்தின் மத்தியில் நிலாவெளிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் இவ்வாலயம் இருக்கிறது. இந்த ஆலயம் பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவில் எனப் பெயர் பெற்றதற்கோர் காரணம் கூறப்படுகின்றது. முற்காலத்தில் கந்தசுவாமி மலையிலிருந்து ஊற்றெடுத்த சிற்ருற்றின் ஒரு கிளை தற்போது இந்த ஆலயம் இருக்கும் இடத்திற்குச் சமீபமாகப் பாய்ந்ததென்றும், மற்றெருகிளை தற்போதிருக்கும் சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாகப் பாய்ந்து சமுத்திரத்தில் சங்கமமாகியதென்றும் கர்ணபரம்பரையாகப் பேசப்பட்டு வருகின்றது. எனவே தான் முன்னது பெரியதொடுவாய் என்றும் பின்னது சின்னத்தொடுவாயென்றும் அழைக்கப்படுகின்றது இவை இரண்டு கிளைகளுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி படுக்கை யெனப்படும். இப்போதும் இப்பிரதேசம் படுக்கையென்ற பெயராலேயே வழங்கி வருகின்றது. இங்கு ஒரு பத்திரகாளி கோவில் இருக்கின்றது. நிலாவெளியிலுள்ள உப்பளங்களில் உற்பத்தியாகும் உப்பு திருக்கோணமலைக்கு எடுத்து வரப்படும் வழியில் தங்கிச்செல்லும் இடமாயிருந்ததால் இக்கிராமம் உப்புவெளியென்றும். இங்குள்ள ஆலயம் உப்புவெளிப் பெரிய தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலென்றும் பெயர் பெற்றது.

சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன் இவ்விடத்தில் பிள்ளையார் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதென ஊகிக்க இடமுண்டாகிறது. 1715 ஆம் ஆண்டளவில் தற்போது இவ்வாலயமிருக்குமிடத்தில் ஒரு பெரிய ஆலமரம் இருந்ததாகவும், அதன் கீழிருந்த கல்லைப் பிள்ளையாராகக் கருதி மக்கள் வழிபட்டு வந்ததாக அறியக்கிடக்கின்றது. பின்னர் உயர் திரு. அருணகிரிக் குருக்களும் அந்த இடத்தில் சிறுகோவிலொன்றைக் கட்டி அந்தக் கல்லை வைத்து வழிபாடியற்றிவந்தார். தற்போதுள்ள கற்கோவிலிலும் இந்தக்கல் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கு முதற்பூசை முடித்த பின்பே மூலஸ்தானப் பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன. திரு. அருணகிரிக் குருக்களும், அவருடைய மகன் திரு. நல்லதம்பி ஐயரும் ஆதியிலமைக்கப்பட்ட கோவிலில் பல ஆண்டுகள் தொடர்ந்து பூசை செய்து வந்தார்கள். இவர்களுடைய பரம்பரையில் வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் திரு ஏரம்பு ஐயர் அவர்களும், அவருடைய மாமனர் திரு. கந்தசாமிக் குருக்களும், மைத்துனர் திரு. நாகலிங்கக் குருக்களும் உப்புவெளிச் சைவப் பெருங்குடி மக்களின் உதவியோடு மடாலய மொன்றைக் கட்டிப் பல திருத்த வேலைகளையும் செய்து ஆலயத்தை முன்னரிலும் சிறப்பாக நடத்தி வந்தார்கள். பின்னர் ஏரம்பு ஐயருடைய மகன் சிவஸ்ரீ விஸ்வலிங்கக் குருக்கள் ஊர்ப் பொதுமக்களின் உதவியோடு தூபி முதலிய ஆலயத் .. திருப்பணிகளை முறைப்படி செய்து நிறைவேற்றி *18-5-1933* இல் சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்' *1973* இல் கடைசியாகச் செய்யப்பட்ட கும்பாபிஷேகத்துடன் இவ்வாலயத்தில் நான்கு முறை கும்பாபிஷேகங்கள் நடை பெற்றுள்ளன.

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசன மண்டபம் என்னும் நான்குமண்டபங்களைக் கொண்ட இவ்வாலயத்தின் கருவறையில் விநாயகர் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. அங்குசம், பாசம், ஒற்றைக்கொம்பு, மோதகங்களைத் தாங்கிய சதுர்ப்புஜங்களோடு ஐங்கரமூர்த்தி கருணமூர்த்தியாகக் காணப்படுகின்றார். ஆதியில் வழிபாடு செய்யப்பட்டுவந்த கல்லுப்பிள்ளையர் அர்த்த மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். நாகதம்பிரான், வைரவர் என்னும் பரிவார மூர்த்திகளும் அம் மண்டபத்திலிருக்கின்றது. மகா மண்டபத்தில் உற்சவ மூர்த்தியும், வேலும், தெரிசன மண்டபத்தில் மூஷிகம் பலிபீடம் என்பனவும், ஆலயத்தின் முன்புறத்தில் மணிக்கோபுரமுமுண்டு. காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டுகாலமும் நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. ஆனி உத்தரத்தில் அலங்கார உற்சவம் ஆரம்பமாகிப் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது. பதினோராம் நாள் சுவாமி கடலில் தீர்த்த மாடுகின்றார். அடுத்தநாள் பூங்காவன உற்சவத்தை உப்புவெளி இந்து இளைஞர்கள் சிறப்பாக நடத்திவருகின்றார்கள். இவைகளை விட விநாயக சதுர்த்தி, திருக்கார்த்திகை, பெருங்கதை, சூரன் போர், திருவெம்பாவை முதலிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. பண்டைக்காலந் தொடக்கம் சைவப் பெருங்குடி மக்கள் பக்திபூர்வமாக ஆதரித்து வந்த இவ்வாலயத்தை இன்றும் அவ்வாறே நடத்தி வருகின்றார்கள். தற்போது இவ்வாலயத்தில் சிவஸ்ரீ ஏ. விஸ்வலிங்கக் குருக்களும், புலவர் சிவ.ஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்களும் நித்திய நைமித்திய பூசைகளை நடத்திவருகின்றார்கள். சிவ. ஸ்ரீ ஏ. விஸ்வலிங்கக் குருக்களால் பாடப்பெற்ற திருவூஞ்சல் பாடல் இவ்வாலயத்திலிருக்கின்றது. இந்த ஆலய வரலாற்றைத் தந்துதவிய இப்பெரியாருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புவெளிக் காளிகோவில்

சைவ சித்தாந்த சிகாமணி சைவப் புலவர் பண்டிதர்

## இ. வடிவேல்

இந்த ஆலயம் பெரியதொடுவாய்ப் பிள்ளையார் கோவிலுக்கு அருகே இருக்கின்றது. இக் கோவிலுக்குச் செல்வதற்குரிய மார்க்கத்தைப் பெரிய தொடுவாய்ப் பிள்ளையார் கோவில் வரலாற்றில் பார்க்கவும். 1980 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் திகதி இவ்வாலயத்திற் பத்திரகாளியம்பாளைப் பிரதிஷ்டை செய்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தியிருக்கின்ருர்கள். இவ்வாலயத்தின் பழைய வரலாறு இரண்டாவது மகா யுத்தத்தின் தாக்கத்தால் புது வரலாருக மாறியமைந்திருக்கின்றது. சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன் தற்போது உப்புவெளி உப தபாற்கந்தோர் இருக்குமிடத்திற்கு அருகாமையில் இவ்வாலயம் இருந்தது. உப்புவெளி மக்கள் பயபக்தியோடு இவ்வாலயத்தில் வழிபட்டு வந்தார்கள். அப்போது இதற்கு நடுப்பத்திரகாளி கோவில் என்றும் ஒரு பெயரிருந்தது. இரண்டாவது உலகமகா யுத்தம் நடைபெற்ற போது இந்தக் கோவில் இருந்த பிரதேசம் முழுவதையும் சுமார் நூறு ஏக்கர் நிலத்தைப் பிரித்தானிய அரசாங்கம் கடற்படைத்தளம் அமைப்பதற்காகச் சுவீகரித்துக் கொண்டது. இதனுல் பொதுமக்கள் இவ்வாலயத்திற்குச் சென்று வழிபட முடியாமற் போய் விட்டது. இவ்வாலயத்திலிருந்த அம்பாளையும் வெள்ளியினுலான சூலத்தையும் எடுத்துச் சென்று பெரிய தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலில் வைத்திருந்தார்கள். இந்தச் சூலத்தையும் பத்திரகாளி அம்பாளின் திருவுருவத்தையும் தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள உப்புவெளிப் பத்திரகாளிகோவிலில் நாம் தரிசிக்கக் கூடியதாயிருக்கின்றது.

கற்பக்கிரகம் அர்த்தமண்டபம் என்பனவற்றைக் கொண்ட இந்தச் சிறிய கற்கோவிலில் கருவறையில் அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்ருள். கற்பககிரகத்திற்குத் தூபி அமைத்திருக்கின்ருர்கள் மகாமண்டபம் ஓலையால் வேயப்பட்டிருக்கின்றது. அம்பாள் வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை மடித்து சுகாசனமாக பத்மபீடத்தில் அமர்ந்திருக்கின்ருள். சூலம், கபாலம், பாசம், கட்கம் தாங்கிய சதுர்ப்புஜங்களோடு அம்பாள் திருக்காட்சி கொடுத்து அருள் புரிகின்ருள். அம்பாளுக்கருகில் வெள்ளிச் சூலமும் வீரபத்திரரும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டு காலப்பூசைகள் நடைபெற்றுவருகின்றன. ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகதினத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாளாகக்கொண்டு விசேட ஸ்நபனுபிஷேகமும் அலங்கார உற்சவமும் நடைபெற்று பதினோராவது நாள் தீமிதிப்பு வைபவம் நடைபெறுகின்றது. வைகாசிப் பொங்கல், நவராத்திரி, கௌரி நோன்பு, திருவெம்பாவை என்பன விசேடவழிபாடுகளாக நடை பெற்றுவருகின்றது. ஆலய நித்திய, நைமித்திய கருமங்களை சிவஸ்ரீ. ஏ. விஸ்வலிங்க குருக்களும்,புலவர் வை. சோமாஸ்கந்தக் குருக்களும் நடத்தி வருகின்றூர்கள். இந்த ஆலய வரலாறுகளைத் தந்த இவர் களுக்கு நன்றி உரியதாகும்.

---


# நன்றி நவிலல்

4-3-87 இல் சிவபதமடைந்த எங்கள் பேரனர் சிவஸ்ரீ.ஏ வை. விஸ்வலிங்கக் குருக்கள் அவர்களின் சமாதிக் கிரிகைகளிலும் 15-3-87 இல் நடைபெற்ற மோட்சதீபக் கிரியைகளிலும் பங்கு பற்றிய உற்றூர், உறவினர் அவர்களுக்கும் எமது உளங்களிந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

100, வித்தியாலயம் வீதி,
திருக்கோணமலை.

15 - 3 - 87

இங்ஙனம்
R. கந்தசாமி
வை. சோமஸ்கந்தக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org